# அண்ணன் என்ற எம் கவிதையின்
# 50வது அகவை விழா

ஓராயிரம் கவிதைகளின்
தாயாக நீங்களிருந்தாலும்
ஓர் கவிதையாய்
எம் தாய் தந்த
கிளீற்றஸ் என்ற கவிதைக்கு
நிகரேதுமில்லை

புதுமைகள் ஆயிரம் இருந்தாலும்
எங்கள் தலைமகன்
உங்களது
வாழ்வியல் புதுமைக்குள்
நாம்
மூழ்கி முத்தெடுத்தோம்

வளமான இதயம்
யதார்த்தமான இளமை
மிகைப்படுத்தாத புத்திமதிகள்
பிரமிக்கும் பாசம்
இயற்கையான உறவு
வழுவாத தமிழறிவு
கனாக்காணத்தூண்டும் கவியறிவு
முற்போக்குச் சிந்தனை வாதம்
செயற்கையற்ற உற்சாகம்
முத்தாய்ப்பான ஒரு நேசக்கரம்
முத்தான சிரிப்பு
பிழையிலே அறிவுரை
வெற்றியில் உற்சாகம்
வியப்பூட்டும் கணித உத்தி
மலைப்பூட்டும் சிந்தனைத்திறன்

மொத்தத்தில்,
துரைசிங்கம் குடும்பத்தில்
மைக்ரோஸ்கோப் கொண்டு
பாசத்தின் ஆழத்தைத்
தேடிப்புடம்போடும்
ஒரு
சுத்தமான சுவையான
சுகமான இதமான
முழுவடிவம் நீங்கள் !

புதுமைகள் ஏராளம்,
புதுக்கவிக்கு உரமிட்ட
புரட்சிக் கவி பாரதியின் புதுமை
கவிப்புயலாய் வீசிச்சென்ற
பாரதிதாசனிடம் புதுமை
கிராமத்துமண்ணை மணம்வீச வைத்த
பாரதிராஜாவிடம் புதுமை

உலகவரலாற்றில்
முழுமையான தமிழ்வானொலியை
முதன்முதலாய் அறிமுகம்செய்த
இளையபாரதியும் ஓர் புதுமை
இருந்தாலும்
எங்கள் அன்னைக்கு
நீங்களே என்றும்
முதற் புதுமை
பிந்திப் பிறப்பெடுத்த
எமக்கெல்லாம்
மறக்காமல்
புத்தி சொல்லி
வளர்த்தீர்கள்

கவனமாய்ப் படி
கருத்தாய் சுகம் கார்
காலத்தோடு தேடு
மீதியைச் சேரு
நேசமாய் உறவை மதி
குடும்பத்தில் பாசம் வை
குருவை நேசி
கோயிலை மறவாதே
என்று
உங்கள் பாப்பாப் பாடல் கேட்டே
நாம் பாசமுடன் வளர்ந்தோம்

ஒரு நல்ல அண்ணனாக
நன்மைகள் பல
அடுக்கடுக்காய் செய்தீர்கள்
நன்றிகள் கோடி !

சிறுவயதில் தங்களுடன்
இணைந்துகொண்ட
வேண்டாப் பிள்ளையாக
"தொய்வு"
இடர்கள் பல தந்தாலும்,
கிறங்காமல்
அதிகாலை எழுந்து
அவசரமாய்ப் பறந்து
எழுபத்தியேழில் யாழ் நுழைந்து

அடுத்த பேரூந்தில்
கல்லூரி பயணித்து
கடுமையாய்க் கற்று
கவனமாய் மீண்டும்
பல மணி பயணித்து
வீடு வருவதே
தினமும் தொழிலாய்,

எனினும்
மனமுடைந்து போனதில்லை
நீங்கள் !
வெற்றிச் சித்தி பெற்று
பக்குவமாய்
தொழிலொன்று
நம் மண்ணில் கண்டு
நிறைவு கண்ட
நாயகன் நீங்கள் !

ஹாக்கியில்
கல்லூரிக் கதாநாயகன்,
கிரிக்கெட்டின் ஓர்
மனநிறை ரசிகன்,
நூல்கள் பேசினால்,
தங்களை அதிகமாய்ப்
புரட்டியமைக்காய்
வழக்குப்போட்டுவிடும்,
அத்தனை பிரிய வாசகன்,
இருப்பினும்
எம் குடும்பத்தின்
இனிய யாசகன் !

நலமாக வாழ்ந்திட
வளமான உறவும்
இணைந்து புறப்பட
இனிய இரு மகவும்
புகழோடு தொடர்ந்திட
முத்தமிழ் அறிவும்
சித்திகள் கண்டிட

இறையேசு அருளும்
இத்தனைக்கும் மேலாய்
ஈர்நான்கு சோதரரின் அரணும்
தீராப் பாசம்கொண்ட
அன்னையின் ஆசியும்
நிழலாய்த் தொடரும்
தந்தையின் வியாசமும்
மற்றும் உறவுகளின்
மனநிறை வசமும்
நிட்சயம் நிரந்தரமாய்த்
தங்களுடன் பயணிக்கும்

அதனால்,
அண்ணா !
வளமாக நூறாண்டு
நலமோடு வாழ்ந்திட
வளனருள் நிறைவாய்
வேண்டினம்,

நன்றிகள் என்றும்
எங்கள் அண்ணனுக்கு !!

என்றும் பாசமுடன்,
தம்பி
குயின்ரஸ் குடும்பம்
(டீலியா, சங்கீத், கவீந்)